www.Padasalai.Net

01.07.2024 முதல் 30.09.2024 மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

26 JUL

கடித(efile)எண். 7093 /பக5(1)/2024-1, நாள்:24.07.2024

அனுப்புநர்
திரு.சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

26/07/24

இ3

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள் : பள்ளிக்கல்வி – மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி குழந்தைகளை உள்ளடக்கிய இடைநிலைக் கல்வித் திட்டத்தினை (IEDSS) செயல்படுத்தி 202 சிறப்பு கல்வியியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது–தற்போது 01.07.2024 முதல் 30.09.2024 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்கக் கோருதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வி பக5(2)த்துறை, நாள்.30.01.2015.
2. அரசாணை (1டி) எண்.138, பள்ளிக் கல்வி பக5(1)த்துறை, நாள்.23.08.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை கள் கடித ந.க. எண்.000690 /எல்/ இ3/2021, நாள். 08.03.2024.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 000690 /எல்/ இ3/2018, நாள். 02.07.2024.

------

பார்வை 1–இல் காணும் அரசாணையில் அரசு உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி குழந்நதைகளை உள்ளடக்கிய இடைநிலைக் கல்வி திட்டத்தின் (IEDSS) கீழ் ரூ.9300–34800 தர ஊதியம் ரூ.4,600/– என்ற ஊதிய விகிதத்தில், 202 சிறப்பு கல்வியியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்தும், இவ்வாறு தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட வேண்டும் எனவும் இப்பணியிடங்களுக்கான செலவினத் தொகை முழுமையும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் (RMSA) மத்திய அரசிடம் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் ஆணையிடப்பட்டது. பார்வை 2–இல் காணும் அரசாணையில் மேலே

www.Padasalai.Net

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 202 சிறப்பு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில், 59 பணியிடங்கள் நிரப்பப்பட்டதில், அதில் 58 பட்டதாரி ஆசிரியர் மட்டுமே பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர் எனவும், மீதம் உள்ள 144 சிறப்பு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வருங்காலங்களில் பணியிட தேவைக்கேற்ப படிப்படியாக ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வி நடத்தி, தேர்வில் தேர்ச்சி பெற்ற பணிநாடுநர்களைக் கொண்டு போட்டித் தேர்வு மூலமாக தெரிவு செய்யப்பட்டு பணியில் சேர்ந்த பிறகுதான் தொடர் நீட்டிப்பு ஆணை பெறப்பட வேண்டும் என்றும் நிரப்பப்பட்ட 58 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. பார்வை 3 –இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் 01.04.2024 முதல் 30.06.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டுள்ளது என்றும் 01.07.2024 முதல் 31.12.2024 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று மேற்குறிப்பிட்டுள்ள 58 சிறப்பு கல்வியியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 30.09.2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.07.2024 முதல் 30.09.2024 வரை மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334 நிதி(சம்பளம்)த் துறை, நாள். 22.10.2022–இல் துறைச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு செயலாளருக்காக.

24/7/2024

2/4

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

நிதி(கல்வி–II) துறை , சென்னை–9.

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இவ்வியக்குநரக ந.க.எண்:- 000690/எல்/இ3/2018 நாள்: 26.07.2024

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

26/7/24

இணை இயக்குநருக்காக

பெறுநர்:-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

26/7/24